# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன்
JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 7 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 4**
**APRIL 2023 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக.

இம்மாதமும் மார்ச் & ஏப்ரல் இருமாத ஜாமக்காரனையும் ஒன்றாக இணைத்து அனுப்புகிறேன்.

கடந்த மாத ஜாமக்காரனில் தொடங்கிய BYM ஸ்தாபகர் சகோ. R. ஸ்டான்லி அவர்களின் வியாதி படுக்கையில் அவர் அனுபவங்கள். அந்த அனுபவத்தையும் அதனோடு வசனத்தையும் இணைத்து தன் சொந்த வாழ்க்கைக்கு அந்த வசனங்கள் எந்த அளவு பிரயோஜனமாக இருந்தது, எந்த அளவு பெலப்படுத்துகிறது என்பதை எழுதியிருந்தார். அதன் தொடர்ச்சியை இம்மாத ஜாமக்காரனிலும் வாசித்து பயன் பெருங்கள்.

☐ கடந்த மாத ஊழியர்கள் எல்லாம் மிக ஆசீர்வாதமாக அமைந்தது. கோயமுத்தூர் (திருச்சி ரோடு) Christ Churchல் நடந்த விசேஷமாக ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று நாள் கூட்டங்கள் மிக ஆசீர்வாதமாக அமைந்தது. இரண்டாவது நாள் இரவு நடந்த கூட்டத்தில் ஆவியானவர் என்னை விசேஷமாக பெலப்படுத்தி ஊக்குவித்தால் அன்று இரவு மட்டும் **இரண்டு மணி நேரம் 7 நிமிடங்கள்** தொடர்ந்து பேசினேன். மக்கள் மிக ஆர்வமாக செய்தியை கேட்டதினாலும், ஆயர்களோ, சபை பொருப்பாளர்களோ நேரம் அதிகமாகிவிட்டது என்று என்னை தடுக்கவே, ஜாடையாக நிறுத்த சொல்லி, எந்த சலனங்களையும் ஏற்படுத்தவில்லை. மேலும் என் செய்திகள் அனைத்தும் லைவ்வாக

YouTubeயிலும் அனுப்பினார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. கர்த்தர் எனக்கு கொடுத்த ØÃé ÝmÂï Vï ü ¼VÝ] «D ØÄK Ýmþ¼Å[ . **இரண்டு மணி நேரம்** நின்றுக்கொண்டோ பிரசங்கம் செய்தது. கொரோனா வியாதிலிருந்து கர்த்தர் எனக்கு கொடுத்த உயிர் பிச்சைக்குபின் இது முதன் முறையாகும்.

அதன்பின் **பெங்களூரில் ஜெய்நகரில்** ஒரே நாளில் பெரிய வெள்ளி Good Friday செய்தியாக **7 மொழிகளையும்** காலை 8 மணிக்கு ஒரு ஆலயத்திலும் 11 மணிக்கு Platt Memorial CSI சபையிலும் அதே 7 மொழிகளைப்பற்றி நான் ஒருவனே பேசி முடித்தேன். இதில் விசேஷம் என்னவென்றால் 8 மணி ஆராதனைக்கு **கிறிஸ்து ஆலயம்** என்ற சபையில் பிரசங்கம் கேட்டவர்களில் பலர் 1 1 மணிக்கு Platt CSI சபை Good Friday ஆராதனைக்கும் வந்தனர். ஆனால் ஒரே மாதிரி பிரசங்கமாக இருந்தால் சலிப்பு ஏற்படும் என்று 7 மொழிகளையும் வித்தியாசப்படுத்தி பேசவேண்டிய நிர்பந்தத்திற்குள்ளானேன். ஆவியானவர் வித்தியாசமான தியான செய்தியாக பேசவைத்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

2023 **ஜனவரி** முதல் மதுரை CSI டையோசிஸ் **இளந்தோப்பு** கன்வென்ஷன்

**மதுரை** டையோசிஸ் **பிச்சிவிளை** கிராம CSI சபை கன்வென்ஷன்

**பெப்ரிவரி** **கன்னியாகுமரி** மாவட்டம் **குலசேகரபுரம்** கன்வென்ஷன்

**திருநெல்வேலி** CSI டையோசிஸ் **NGO B Colony** கன்வென்ஷன்

**மார்ச்** **கோயமுத்தூர்** CSI டையோசிஸ் **ADDS Memorial Church** கன்வென்ஷன்

**மதுரை** டையோசிஸ் **Sivakasi** கன்வென்ஷன்

**ஏப்ரல்** **கோயமுத்தூர்** டையோசிஸ் **Christ Church** கன்வென்ஷன்

**பெங்களுர்** மத்திய கர்னாடகா டையோசகிஸ்

இரண்டு CSI சபைகளில் ஒவ்வொரு நாளும் இரண்டு சபைகளிலும் சிறப்பு கூட்டங்கள்

**தூத்துக்குடி** டையோசிஸ் **டூவிபுரம்** CSI கன்வென்ஷன்

6ம் தேதி மட்டும் **ஒரு நாள் உபவாச கூட்டம்** நாயினூர் (திசையன்விளை அருகில்) ஏற்பாடு செய்யப்பட்டது.

**தூத்துகுடி** CSI டையேசிஸ் **பிரகாசபுரம்** CSI கன்னெ்ஷன்

**துத்துக்குடி** CSI டையோசிஸ் **உக்கிரம்பேட்டை** CSI கன்வென்ஷன்

**சாயர்புரம்** அருகே CMS **சுத்தாங்க சுவிசேஷ சபை** வருடாந்திர கன்வென்ஷன்

2023ல் நடைபெற இருக்கும் தொடர்துள்ள கன்வென்ஷனுக்காக ஜெபித்துக் கொள்ளவும்

☐ இதுவரை எனக்காக **ஜெபித்தவர்கள்** ஊழியத்தின் **பங்காளிகள்** யாவருக்கும் நன்றி.

உங்கள் அனைவருக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

– டாக்டர் **புஷ்பராஜ்**

**திருத்தம்** சில மாதங்களுக்கு முன் அன்னிய பாஷை பேசும் அத்தனை பிரபல பெந்தேகோஸ்தே பாஸ்டர்களும், TPM (சிலோன் பெந்தேகோஸ்தே சபை) யிலிருந்து வெளிவந்தவர்கள் என்று ¨¿]I òÍ ¼[ . ¶]_ Ä**கோ. சகரியா பூனன்** (Zac Ponan) அவர்கள் TPM சபையிலிருந்து வரவில்லை, **பிரதரன் சபை** பாரம்பரியத்திலிருந்து வெளிவந்து சபைகளை நன்றாக நடத்திகொண்டிருக்கிறார் என்பதை திருத்தி அறிவிக்கிறேன்.

**ஜாமக்காரன்** கடந்த மாதம் ஜாமக்காரனில் BYM ஸ்தாபகர் R. ஸ்டான்லி அவர்களின் மூன்று முறை நடந்த இருதய அறுவை சிகிச்சையின் போது மரண அவஸ்தையில் அவர் அனுபவித்த ஆவிக்குறிய அனுபவங்களை வேத வசனத்தோடு ஒப்பிட்டு இருதயம் என்றால் என்ன ? வேதத்தில் கர்த்தர் எதிர்பார்க்கும் இருதயம் மேலும் முழு உடலுக்கு இருதயமே உடலை இயக்கும் மைய பகுதியாகும். அதை எப்படி நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை மிக ஆழமாக வசனத்தோடு ஒப்பிட்டு எழுதினார். அதைத் தொடர்ந்து அவர் எழுதிய மற்ற விவரங்களைத்தான் நாம் தொடர்ந்து வாசிக்க பேகிறோம். ஜெபத்தோடு வாசியுங்கள்

# எனது பலவீனங்கள்

Selected

**தேவன் எனக்குப் பலமானவர்** தனிப்பட்டவரது இவ்வித அறிக்கை திருமறையில் பல இடங்களில் உண்டு. **மோசேயின்** பாடும் உதடுகள் இவ்வார்த்தைகளை முதலாவது உதிர்த்தன. யாத். 15:1,2 **கர்த்தரைப் பாடுவேன்** அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார்... **கர்த்தர் என் பலமும்** என்கீதமுமானவர், அடுத்து இவ்விதம் அறிக்கையிட்டவர் **தாவீது** 2 சாமு 22:33, தேவன் **எனக்குப் பலத்த அரணானவர்!** இதனைச் சங்கீதம் 18:2, 28:7 மற்றும் 118:14ல் தாவீது திரும்பவும் சொல்லுகிறார். சங்கீதப் புத்தகத்தில் இக்கூற்றுள்ள பிற இடங்கள் 19:14, 22:15,19 - 27:1 - 43:2 - 46:1, 59:17, 62:7, 73:26, 81:1 , 140:7 144:1, முதலியன வாசித்துப் பாருங்கள்/ சங்கீதப் புத்தகம் தவிர்த்து **ஏசாயா** 49:5, **எரேமியா** 16:19 **ஆபகூக்** 3:19 போன்ற இடங்களிலும் **இவ்வறிக்கை** தொனிக்கிறது. **புதிய ஏற்பாட்டிலும்** தனி நபர்கள் தங்கள் வாழ்வில் **தேவனது பலத்தை** அனுபவித்திருக்கிறார்கள். **கர்த்தரில் பலப்படுங்கள்** என்ற அறிவுறுத்தல்களும் உண்டு, ஆனால் கர்த்தரே என் பலம் என்ற அறிக்கை இல்லை. (எபே. 6:10)

**உடல்** ரீதியான, **பொருளாதார** ரீதியான, மன ரீதியான மற்றும் **ஆன்மீக** ரீதியான **பலக்குறைவுகளுக்கு** நாம் அந்நியரல்ல, தங்களது **பலவீனங்களை** ஒரு சிலர்தான் வெளிப்படையாய் அறிக்கையிடுவர். ஆனால் மக்கள் தங்களைக் குறைவாய் மதிப்பிட்டுவிடுவார்கள் என்றெண்ணிப் பலர் அமைதியாய் இருந்துவிடுவர். **தங்களது பல**

**வீனங்களைத்** தேவனுக்குமுன் ஒத்துக்கொள்வோருக்கே பிறரைவிடத் **தேவ பலம் அதிகமாய் அருளப்படுகிறது** என்பதே நான் என் அனுபவத்தில் கண்டறிந்தது. நமது **பலவீனங்களை** ஒலிபரப்பவேண்டிய அவசியமில்லை, ஆனால் **தேவனிடமும்** நம்மை **முதுகில் குத்தமாட்டார்கள்** என்பவர்களிடமும் நமது **பலக்குறைவுகளைச்சொல்லுவதே** தேயைான பலத்தைப் பெற்றுக்கொள்ள நல்ல வழி (சங். 6:2, 29:11அ, எரே 31:25) தங்களது **பலவீனங்களை எழுதிவைக்குமளவு** அப்போஸ்தலரிடம் **ஒளிவுமறைவின்மை** இருந்தது. அவர்கள் தங்களைப் **பலவீனருடன்** அடையாளப்படுத்திக்கொண்டும் வாழ்ந்தனர். (2 கொரி 11:29அ) நாம் எல்லாருமே **பலக்குறைவு** உள்ளவர்கள்தான், **வெவ்வேறு பகுதிகளில் பலக்குறைவு** அவ்வளவுதான். பல்வேறு **பலவீனங்களுடன்** போராடுவோரின் சார்பிலும் **எனது சார்பிலும்** இக்கட்டுரை எழுதுகிறேன். போராட்டத்தில் தவிக்கும் எங்களோடு சேர்ந்துக்கொள்ள உங்களையும் அழைக்கிறேன். **தேவன் எனக்குப் பலமானவர்** என்பதுதான் அனைத்துப் பலவீனங்களுக்கும் முடிவான பரிகாரம், விலிலியத்தின் 40 புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ள 200 வசனக் குறிப்புகளைக் கட்டாயம் எடுத்து வாசியுங்கள்.

## 1. எனது மாம்சம் பலவீனமானது

எனக்கிருப்பது உற்சாகமான ஆவி, ஆனால் **பலவீன மாம்சம்.** தமது சீடரிடம் இயேசுவே இதனைக் கூறினார். ஆவி உற்சாகமுள்ளதுதான். **மாம்சமோ பலவீனமுள்ளது.** (மத் 26:41, மாற் 14:38) ஆம் சோதனைகளிலிருந்து தப்பியோடிவிடவேண்டும் என்று நான் பல தீர்மானங்கள் எடுக்கிறேன். ஓரிரு நாட்கள் அல்லது வாரங்கள் நான் **சமாளிக்கிறேன்.** ஆனால் **மறுபடியும் விழுந்துவிடுகிறேன்.** இவ்வித போராட்ட அனுபவமிருந்த அப்போஸ்தலன் **பவுல் கூறுவதை** ஆமோதிக்கிறேன். தீயவற்றின் இழுப்பை மேற்கொள்ளுவதற்கு அவரது சாட்சி என்னை ஊக்குவிக்கிறது. ரோ. 7:15,18,19 **நான் செய்வது எனக்கே** சம்மந்தமில்லை. **நான் விரும்புவதை செய்யாமல் நான் வெறுக்கிறதையே செய்கிறேன்..... நல்லது செய்ய வேண்டும் என்ற விருப்பம் என்னிடம் உண்டு,** நல்லது செய்வதோ என்னிடம் இல்லை, ஆதலால் நான் விரும்பும் நல்லதை செய்யாது, **விரும்பாத தீயதையே செய்கிறேன்.** இந்நோய்க்கு பரிகாரம் கண்டுபிடித்த **பவுலுக்கு நன்றி. எனக்குள் குடிக்கொண்டிருக்கும் பாவம்** (வச 20) **பாவ சுபாவம்** Sin Principle இன்னும் **எனக்குள் இருக்கத்தான் செய்கிறது.** அது என்னிலிருந்து நீக்கப்படவில்லை. இயேசு என்னை இரட்சித்தபோது, **பாவத்தின் தண்டனையிலிருந்து** Panalty **நான் விடுவிக்கப்பட்டேன்.**

(6:23) ஆனால் **பாவத்தின்** வல்லமையோ Power இன்னும் **எனக்கெதிராய்ச் செயல்பட்டுக்கொண்டேயிக்கிறது** எனது இறுதி மூச்சுவரை இப்போராட்டம் தொடரும். **இவ்வுண்மையை நான் மறுத்தால்,** அல்லது மறைத்தால் என்னைத்தான் நான் ஏமாற்றிக்கொள்கிறேன். (1 யோ. 1:8) அதாவது என்னில் **பாவ சுபாவம்** ஒழிக்கப்படவில்லை என்பதுதான் அதன் அர்த்தம் Eradication. ஆனால் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை Emancipation **அனுபவித்துக்கொண்டிருக்கிறேன்.** இச்சத்தியத்தை நான் மறந்துவிட்டால், **இரட்சிப்பின் மகிழ்ச்சியை இழந்து** குற்றவுணர்வுடன் சுற்றுலா Guilt Trip வந்துக்கொண்டிருப்பேன்.

ரோமர் 7ம் அத்தியாத்திலிருந்து **மேலே குறிப்பிட்ட பவுலின் அறிக்கையை** நான் சோதனைகளுக்கு இடங்கொடுப்பதற்கு **மூடலாய்ப் பயன்படுத்திவிடக்கூடாது. தனது மனதிற்கும் உடலுறுப்புக்கும்** இடையில் தொடரும் போராட்டத்தை விளக்கிய பின்னர், **விடுதலைக்காய் அப்போஸ்தலன் கதறுகிறார்.** (வச 23,24) முடிவில் தனது நிர்பந்த நிலைக்கு நமது கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவே பதில் எனக் கண்டிபிடிக்கிறார்,** (வச 25) அதையும் நாம் கவனிக்க வேண்டும். இதன் பொருளென்ன? **பாவத்திற்கு மறுப்பு** சொல்ல **என்னிலிருக்கும் கிறிஸ்துவின் ஆவி** எனக்கு **பலம்** தருகிறது. (ரோ 8:2,9) இந்த **உள்ளான பலம்தான் கிருபை** என்பது அதின்மீது சார்ந்திருந்தால்தான் **பாவம் என்னை** மேற்கொள்ளாது.(6:14, தீத் 2:11,12) **உடல் ஆசை, இச்சை** நிறைந்த **பார்வை** வாழ்வுச் **செருக்கு** ஆகிய **முப்புரிப் பாவங்களை** எழுதியிருக்கிறதே என்று பிசாசின் முகத்தில் அறைந்தாற்பேல **இயேசு கூறி வெற்றி கண்டதை** நான் எனக்குள் நினைவு படுத்திக்கொண்டேயிருக்கவேண்டும், (மத் 4:1-10, 1 யோ. 2:16) பாவத்தை மேற்கொள்ள உதவியாக எழுதியிருக்கும் திருவார்த்தைகளால் நான் என்னை நிறைத்துக்கொள்ளவேண்டும், (சங் 119:11) இறைவார்த்தையை என்னில் வேர்கொள்ள இடமளிக்கும் போதுதான் நான் **பலம் பெறுகிறேன்.** (1 யோ 2:14) **விபசாரத்திற்கு** யோசேப்பு **எவ்விதம் விலகியோடினான்** மற்றும் **அனனியா, மிசாவேல் அசரியா** ஆகியோர் **விக்கிரகாராதனைக்கு** எவ்விதம் விலகியோடினான் போன்ற திருமறை எடுத்துக்காட்டுகளை என்கண்முன் நிறுத்திக் கொள்ளவேண்டும். (ஆதி 39:1-12, தானி 3:13-19) **விபசாரம் விக்கிகராதனை** ஆகிய இரு பாவங்களுக்கும் **விலகியோட வேண்டும்** என்ற குறிப்பான எச்சரிப்புகள் எனக்குண்டு. (2 தீமோ 2:22, 1 கொரி 10:14) தற்செயலான முதல் பார்வையைத் தொடரும், நான் **விரும்பிய இரண்டாம் பார்வைக்கு** எதிரான இயேசுவின் எச்சரிப்பை **நான் கவனத்திலிருத்த வேண்டும். தொடுதல்** போலாவே **இரண்டாம் பார்வையும் பாவமே** (மத் 5:28) மலைப்பிரசங்கத்தை அடிக்கடி தியானிப்பது வெற்றி வாழ்வுக்கான நடைமுறை

ஆலோசனைகளை எனக்குத்தரும் (மத். 5,6,7)

என்னைப்போலவே வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் சோதிக்கப்பட்ட இயேசுவுக்கு எனது போராட்டங்கள் நன்றாகவே புரியும் என்பது எனக்கு பேரூக்கம் கொடுத்தது (எபி 4:15) இளமைப் பருவம். **வாலிப பருவம்** நடுவயது பருவம் ஆகியவற்றின் சோதனைகளைச் இயேசுவும் சந்தித்தே அவர் வாழ்ந்துவந்தார். எனது பலவீனங்களைக் குறித்து அவர் பரிதபிக்கிறார். மேற்கொள்ள முடியாத அளவு சோதனை வலுத்தால் நான் அவரிடம் நான் ஓடவேண்டும். இப்பொழுது அவர் அமர்ந்திருப்பது தீர்ப்பின் ஆசனம் அல்ல. **கிருபையின் ஆசனம்** கிருபாசனம் (வச 16) **என்னைக்குற்றப்படுத்த** அல்ல, **எனக்கு உதவவே** அவர் அங்கு இருக்கிறார். (2:18) தேவனுக்குமுன் நான் உத்தமாய் நடக்க அவர் என்னை அழைக்கும்போது **தம்மைச் சர்வ வல்ல தேவன்** என்று அறிமுகப்படுத்துகிறார் (ஆதி 17:1) அதாவது அவருக்குமுன் நான் உத்தமமாய் நடக்க அவர் எனக்கு **வல்லமை தருவார்.** திருமறையில் தேவன் அதிமுக்கியமாய் இரு பெயர்களால் அறியப்படுகிறார். ஒன்று **எலோயீம்** அடுத்தது **யேகோவா எலோயீம்** என்பது அவரது **வல்லமையையும்,** யேகோவா என்பது **அவரது உடன்படிக்கையையும்** குறிக்கும். **எலோயீம்** என்பது 2570 முறையும் **யேகோவா** என்பது 6823 முறையும் வேதத்தில் வருகிறது. இதன் பொருள் என்னவெனில் **வல்லமையுள்ள தேவனே** எனது தேவன் **எலோயீம்** என்பதுதான் பைபிளில் வரும் **தேவனது முதலாம் பெயர்** (ஆதி 1:1) நான் சேவிக்கும் தேவன் **எவ்வளவு வல்லவர்** எவ்வளவு நல்லவர் அல்லேலூயா !

நான் விழுந்துவிட்டால், விட்டுவிடக்கூடாது **எழுந்திருக்கவேண்டும்.** இது மிக முக்கியம் (நீதி 24:16அ) இயேசுவின் கரங்களிலும் பிதாவாகிய தேவனின் கரங்களிலும் நான் பத்திரமாயிருப்பதால் **எந்த தோல்வியும் எனக்கு முடிவானதல்ல** (யோ 10:28,29) எனக்குள் இருக்கும் விண்ணுலகத் தேவனானவர் **எனக்கெதிராய் இருக்கும்** மண்ணுலகத் **தேவனானவனைவிட வல்லவர்.** (1 யே. 4:4) ஒவ்வொரு தோல்வியும் **அடுத்த தோல்வியை** தவிர்ப்பதற்கு எனக்கு பாடம் **புகட்டுகிறது, பிசாசோ** எந்த **மனிதனோ** என்னைத் தீர்த்துக்கட்ட **நான் அனுமதிக்கமாட்டேன்,** ஏனெனில் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் எனக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை (ரோ. 8:1) நான் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவன். எனவே **சாத்தான் என்னை குற்றம் சாட்டி** அழித்துவிடமுடியாது. (வச 33) **நான் மனம் வருந்தி** தேவனிடம் திரும்பிவரும் போது, தமது **இரத்தத்தை சிந்தி** இப்பொழுது எனக்காய் **பரலோகில் பரிந்து பேசிக்கொண்டிருக்கும் கிறிஸ்து மூலம்** அவர் என்னை நியாயப்படுத்துகிறார். (வச33,34, எபே, 7:25, வெளி 12:10,11) தோல்விகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்டு

ஜெயம் தரும் கவனம் மூலம் விழிப்பாயிருக்கிறேன். (மத் 26:41) விடமாட்டேன், படைக்கலன்களைக் களையமாட்டேன் (எபே 6:11-17) **கர்த்தரிலும்** அவரது **சத்துவத்தின் வல்லமையிலும்** பலப்பட்டுக்கொண்டே இருப்பேன்.(வச 10)

## 2) எனது விசுவாசம் பலவீனமானது

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிதது சொந்த இரட்சிப்பின் அனுபவம் பெற்றேன், தேவனே எனது தந்தை என்றும் நான் அவரது **பிள்ளை** என்றும் நான் அறிவேன். இயேசுவே எனது மேய்ப்பர் என்றும் நான் அவரது ஆட்டுக்கட்டி என்றும் அறிவேன். **பரிசுத்த ஆவியானவரே** என்னை நடத்துகிறவர் என்று அறிந்து அவரது வழிகாட்டுதலை பின்புற்றுகிறேன். ஆனாலும் எதிர்க்காற்றுகள் என்னை மோதியடிக்கும்போது எனது இந்த அடிப்படை விசுவாசம் ஆட்டங்காணுகிறது. **சில பிரச்சனைகளை** என்னால் சமாளிக்கவே முடியவில்லை. ஒவ்வொரு பிரச்சனையும் **முந்தியதைவிடக் கொடுமையாகவே இருக்கிறது.** சீமோன் **பேதுருவைக்** சாத்தான் **கோதுமையைப்போல** புடைத்தது போலவே எனக்கும் நடக்கிறது. (லூக் 22:30 கடல் அலைகள் போல பிரச்சனைகளும், இன்னல்களும் அடுத்தடுத்து விரைவாய் என்னை மோதியடிக்கின்றன (யோபு 1:13-19) ஒரு சில மணி நேரங்களில் பூவுலக ஆசிகள் யாவும் தன்னை விட்டுப் பறிக்கப்பட்டபோது பக்தன் யோபு எப்படித்தான் விசுவாசத்தில் அவ்வளவு உறுதியாய் நின்றாரோ ? இவ்விதப் பேரிழப்பின்போது அவரால் **கர்த்தரைத் தொழுதுக்கொள்ளவும் துதிக்கவும் எப்படித்தான்** முடிந்ததோ? (வச 20,21) தேவன் என்னை **கொன்று போட்டாலும்** அவர் மீது நம்பிக்கையாய் இருப்பேன். என்று அவரால் சொல்ல முடிந்ததின் **இரகசியம்** என்னவோ ? (13:15) இறுதிவரை யோபுவைத் தாங்கிப்பிடித்த சர்வ வல்ல தேவனேயே நான் நோக்கிப் பார்க்கிறேன் (42:2) பேதுருவுக்காய் இயேசு ஜெபித்தது போலவே **எனது விசுவாசம் ஒழிந்துப்போகாதிருக்க** என் அன்பர் இயேசு எனக்காய் வேண்டிக்கொள்ள அவரை நோக்கிப் பார்க்கிறேன் (லூ 22:32)

எனது விசுவாசத்தைத் துவக்கியவர் இயேசுதான் என்றறிவேன். அவர்தான் அதனை முற்றுபெறச் செய்பவராகவும் இருக்கமுடியும் (எபி 12:1) **தேவன் என்னில் துவக்கியதைப் பிசாசு முடித்துவிட முடியாது.** பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள் வீராங்கனைகளால் சவாலடைகிறேன். ஓடிக்கொண்டிருக்கும் என்னைக் கைதட்டியும் விசிலடித்தும் உற்சாகப்படுத்தும் இவர்கள் மேகம்போல் என்னைச் சுற்றி நிற்கிறார்கள். ஆனாலும் பல வேளைகளில் **எனது விசுவாசம் அலைக்கழிக்கப்படுகிறது.** என் இதயம் பல **கேள்விகளைக்**

**கொட்டுகிறது.** கருவறையில் இரட்டைக் குழந்தைகள் போல **விசுவாசமும் அவிசுவாசமும் எனக்குள் மோதிக் கொள்ளுகின்றன.** தேவனால் முடியும், **ஆனால் செய்வாரா?** ஆண்டவரே , நான் விசுவாசிக்கிறேன், **என் அவிசுவாசம்** நீங்க உதவிசெய்யும். என்றுதான் என்னால் ஜெபிக்கமுடிகிறது. (மாற் 9:24) **இறைவார்த்தை** மட்டுமே எனது விசுவாசத்தை வளர்த்து பலப்படுத்த முடியும் (ரோ 10:17) **திருவாக்குகளைத்** திரும்பத்திரும்ப நான் தியானிக்க வேண்டும். **என்னால் செய்யக்கூடாத அதிசமான காரியம் எதுவுமுண்டோ என்று தேவன் என்னைப் பார்த்துக்கேட்கிறார்.** (ஆதி 18:14, எரே 32:27) **உம்மால் கூடாதது ஒன்றுமில்லை** என்று நான் பதிலளிக்க வேண்டும். (எரே 32:17, மத் 19:26, லூக் 1:37) இருள் சூழ்ந்த வேளையில் பிதாவானவரிடம் இயேசு இதைத்தான் அறிக்யையிட்டார். **அப்பா, பிதாவே உம்மால் எல்லாம் கூடும்** (மாற் 14:36, லூக் 22:53அ)

எதிரிகள் சூழ்ந்திருந்த வேளையில்தான் தாவீது அறிக்கையிட்டது **கர்த்தர் என் வாழ்வின் பலமானவர் யாருக்குப் பயப்படுவேன்** ? யாருக்கு **அஞ்சுவேன்** (சங் 27:1) அவரைச்சுற்றி வளைந்துகொண்டிருந்தோரைக் குறித்தே இச்சங்கீதம் பேசுகிறது. அதே கதறலை அவர் அடுத்த சங்கீத்திலும் தொடர்கிறார். (சங் 28) மன்னன் **எசேக்கியாவைப்** போன்று எனது **பலக்குறைவை** நான் இதோ அறிக்கையிடுகிறேன். இன்று **துன்பமும் கண்டனமும் அவமானமும் மிக்க நாள்,** பிள்ளைகளை பெற்றெடுக்க நேரம் வந்துவிட்டது. **பெற்றெடுக்கவோ வலிமை இல்லை.** (2 இரா 19:3) அரசன் யோசபாத்தைப் போன்று தேவனை நோக்கி நான் இவ்விதம் கதறுகிறேன். **எங்கள் தேவனே** எங்களுக்கு எதிராக வந்துள்ள **இத்திரளான கூட்டத்திற்குமுன் நிற்க எங்களுக்குப் பலம் இல்லை,** நாங்கள் செய்யவேண்டியது என்னவென்று எங்களுக்குத் தெரியவில்லை! எனவே என் **கண்கள் உம்மையே பார்த்துக்கொண்டிருக்கிறேன்.** (2 நாளா 20:12) விசுவாச வீரர்கள் **பலக்குறைவிலிருந்துதான் பலமடைந்தார்கள்** (எபி 11:34)

எனது வாழ்வில் **காரியங்கள் தாறுமாறாய்** நிகழும்போது எனது இதயத்தை **ஆராய்ந்துபார்க்கவேண்டும்** என்று போதிக்கப்பட்டிருக்கிறேன். தேவனுக்குமுன் காரியங்களைச் சரிசெய்ய நிச்சயமாகவே இது வழிவகுக்குகிறது. **என்னைத் தண்டிக்கவும் திருத்தவும்** பிதாவாகிய தேவன் எனது இக்கட்டை ஒரு சிட்சையாய் ஒரு ஆயுதமாக பயன்படுத்துகிறார் என்பதை அறிகிறேன் (எபி 12:4-6, 10,11) ஆனாலும் வறட்டி வாட்டும் அனுபவம் வழியே கடந்துசெல்கையில் எனது கைகள் தளர்கின்றன. முழங்கால்கள் தள்ளாடுகின்றன. கால்கள் தடுமாறுகின்றன (வச. 12,13) தேவன் ஒருவரே என்னைப் பலப்படுத்தி

இயல்பு நிலைக்கு என்னை திரும்பக் கொண்டுவரமுடியும் (வச 12) **எனது தற்பரிசோதனையின்போது** விரும்பப்படாத எதனையும் **என்னில் கண்டுபிடிக்க முடியாத** வேளைகளும் உண்டு. (சங் 17:3, 1 கொரி 4:4) ஆனாலும் கடும் வேனிற்காலத்தைப்போல் எனது பலமெல்லாம் வற்றிப்போகிறது. **முன்னால் போகிறேன்,** அவர் அங்கு இல்லை, **பின்னால் செல்கிறேன்.** அவர் அங்கும் இல்லை இடது பக்கம் அவர் செயல்படுகிறார். **அவரையோ பார்க்க முடியவில்லை,** வலது பக்கம் அவர் செயல்பட்டாலும் **அவர் எனக்கு தென்படதில்லை.** (யோபு 23:8,9) தேவன் ஒளித்துக்கொள்கிறாரோ ? நான் செல்லும் வழியை அவர் அறிந்திருக்கிறார் என்று எனக்கு தெரிந்தாலும் என்னை **சுற்றிலும் இருள்தான்** (வச 10அ) **நான் என்ன செய்வேன்?** அப்படியே தேவனை நம்பி அவர்மீது சாய்ந்து கொள்வேன் (ஏசா 50:10) **இந்த இருட்டடைப்பு** Discipline of darkness **தாங்க முடியாதது.** எனவே நான் அவரை பார்த்து **என் மீது இரக்கமாயிரும்,** கர்த்தாவே **நான் பலமில்லாது** போய்விட்டேன். என் ஆத்துமா மிகவும் **வியாகுலப்படுகிறது,** கர்த்தாவே **எதுவரை இரங்காமலிருப்பீர்**? என்று கதறுகிறேன் (சங் 6:2,3)

**எனது ஜெப வாழ்வு பலவீனமானது**

எனது ஜெப வாழ்விலுள்ள **பலக்குறைவு** எனது நெருங்கிய ஜெபத் தோழர்களைவிடத் தேவனுக்கு நன்கு தெரியும். என்று மற்ற தியானப் பயிற்சிகளில் தளர்வைவிட ஜெபத்தில் பலவீனமாயிருப்பதே அதிகக் கவலைக்குரியது என்று அவர் அறிவார். **இதை அறிந்துதான் என்னில் குடிகொண்டிருக்கும்படித் தூயாவியானவரை என் நேசர்** எனக்குள் அனுப்பிவைத்துள்ளார், நான் எதற்காய் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று எனக்கு சரியாய்த் தெரியாது. நான் ஆவியானவரின் உதவியோடு ஜெபிப்பது தவிர்த்து, அவரே எனக்காய் மன்றாடி வேண்டுதல் செய்கிறார், எனது உள்ளுணர்வுகளை தேவனுக்குமுன் வெளிப்படுத்த போதுமான வார்த்தைகள் கிடையாது நான் திணறும்போது ஆவியானவரே எனக்காய் பெருமூச்சுவிட்டுப் பிதாமுன் புலம்புகிறார் (எபே 6:18, யூதா 20, ரோ 8:26) பிதாவாகிய தேவனுக்குமுன் இயேசுவானவரும் எனக்காய் வேண்டுதல் செய்கிறார். அங்கு பரலோகில் கிறிஸ்து இயேசு எனக்காய் வேண்டுதல் செய்கிறார். **இதனால்தான், நான் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய் தேவன் எனக்காய்க் காரியங்களைச் செய்கிறார்** (எபே3:20) இந்த நல்ல ஆண்டவரை நான் எப்படித் துதிப்பேன்! **ஜெபத்தில் எப்பொழுதும் நான் பலப்படவேண்டுமானால் ஆவியானவரின் உதவியை நாடவேண்டும்.**

**என் ஜெப வேளை வாஞ்சிப்பேன்** (Sweet hour of prayer) என்று நான் பாடினாலும்

**எனக்கு ஜெபவேளை என்று ஒன்றும் கிடையாது.** ஆகவே **அதனை வாஞ்சிக்கிறேன் என்றும்** சொல்லமுடியாது. எனது ஜெபப் பழக்கத்தில் நிறைய ஏற்றங்களும் இறக்கங்களும் உண்டு. எனது ஜெப நேரத்தில் ஒரு நாள் அனல் பறக்கும். அடுத்த நாளே அது பனிபோல் குளிர்ந்துவிடும். ஒரு நாள் மலையுச்சி, மறுநாள் படுகுழி எனது ஜெப பலிபீடத்திற்குத் திரும்ப நெருப்பூட்ட சில வேளைகளில் வாரங்களோ, மாதங்களோ பிடிக்கும், **ஆண்டவரே , நான் ஏன் இப்படியிருக்கிறேன்?** ஏதாவது **பாவத்தை என்னிதயத்தில் மறைக்கிறேனா?** (சங் 66:18, ஏசா 59:1,2) **உமது வார்த்தையை** வேண்டுமென்றே **எங்கேயாவது மீறியிருக்கிறேனா**? (நீதி28:9) பதிலளிக்கப்படாத ஜெபங்களும், தாமதமான பதில்களும் என்னை விரக்தியடையச் செய்துவிட்டனவா ?

**எனது** கிறிஸ்தவ வாழ்வின் **துவக்க ஆண்டுகளில்** சிறியதோ பெரியதோ **எல்லாவற்றையும்** ஜெபத்தில் தேவனிடம் எடுத்துச் சென்றேன். இப்பொழுதோ **இக்கட்டான நேரங்களில்தான் அவரிடம் ஓடுகிறேன்.** கூட்டு ஜெபங்களில் மணிக்கணக்காய் நேரம் செலவிடுவது எனக்குச் சிரமமாய் இல்லை. ஆனால் **ஒரு மணி நேரம் தனித்து தேவனுக்குமுன் முழங்காலிடுவது அவ்வளவு கடினமாயிருக்கிறது,** இரவு வேளைகளைத் தனி ஜெபத்தில் கழிப்பதில் இயேசு தேறியிருந்தார் (மத். 14:23, லூக் 6:12, 21:37,38) ஜெபத்தில் எனது பலவீனத்திற்கு இன்னொரு காரணம் என்னவென்னில், **எனது தேவைகளைத் தேவனுக்குமுன் பட்டியலிடுவதே** ஜெபம் என்றாகிவிட்டது. **அவர் சத்தம் கேட்க** நான் போதுமான நேரம் அவருக்குமுன் காத்திருப்பதில்லை. **பேசுவதற்குத்** தீவிரமாகவும் கேட்பதற்கோ ஆர்வமின்றியும் இருக்கிறேன், (பிர 5:12, சங். 141:2,3) மட்டுமல்ல இறையரசுக்கு அடுத்தவைகளைவிடப் பொருளாதாரம் மற்றும் உடலுக்கடுத்த தேவைகளே எனது ஜெபத்தில் முதலிடம் பெறுகின்றன. (மத். 6:25 -33) தன்னலம் நிறைந்த எனது ஜெபங்களில் **தரித்திரர்** மற்றும் **தவிப்போர் இடம் பெறுவதில்லை.** தேவனுக்கேற்ற துக்கத்தைவிட உலகப் போக்கிலான மனவருத்தமே எனக்கு கண்ணீர் வரவழைக்கிறது. (2கொரி 7:10) **உதட்டால்** தேவனைத் தொழுகொள்ளுகிறேன். **உள்ளமோ எங்கேயோ சுற்றுகிறது** (மத். 15:8) இராஜாதி இராஜாவின் அரசவைக்குள் செல்லும்போது **கேவலம் எனது கைபேசியைக்கூட** அணைப்பதில்லை. செல்போனைவிட ஜெபத்தில் **அதிக நேரம் செலவழிக்க இன்றே தீர்மானிக்கிறேன்.** முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும் முழு பலத்தோடும். முழு மனதோடும், தேவா உம்மீது அன்பு செலுத்த முடியாதபடி, என்னை அடிமைப்படுத்தியுள்ள அத்தனையிலிருந்தும் என்னை விடுவியும் (மத். 22:37, 1 கொரி 6:12)

அழியவிருக்கும் காரியங்கள் எவ்வளவு அருமையான மணி நேரங்களைப் பறிக்கின்றன ! மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டுவிடுகிறேனே !

இறைவார்த்தையால் எனது இருதயத்தைநான் நிரப்பிக்கொள்ளாததால் எனது துதி ஆராதனையல் சோகையும் சோகமும் அதிகம் (கொலோ 3:16, சங் 56:10, 138:2) தேவனுடன் நான் செலவழிக்கும் அமைதி வேளையை (quite time) இறைவர்த்தைக்கும் இறைவேண்டலுக்கும் சமமாய்ப் பங்கிடவதில்லை (நெகே.9:3) ஏற்கனவே எவ்வாளவோ ஆசிகள் பெற்றிருந்தும் இன்னும் வேண்டும் என்று தேவனிடம் கேட்பதிலேயே அதிக நேரம் செலவழிக்கிறேன் (சங் 103:1-5) தேவைகளைச் சந்திப்பவரைவிடத் தேவைகள் மீது என் கவனம் பதிக்கப்பட்டு விடுவதே இதன் விளைவு தேவனைக் கிறிஸ்மஸ் தாத்தாவகத்தான் பார்க்கிறேன் ! தேவனிடமிருந்த ஏதாவது கிடைக்காதா என்பதற்காகவே கொள்ளும் உறவை விட அவருடன் நெருங்கிய பாசவுறவை வளர்க்க முயலுவேனாக ! அவரிடமிருந்து பெறுவதற்காய் அல்ல, அவருடன் இருப்பதற்கு என்றே என்ஜெப வேளை மாறட்டும், **அப்பப்பா ஜெபத்தில்தான் நான் எவ்வளவு பொய் பேசுகிறேன்.** பல்வேறு திசைகள் நோக்கிய இருதயத்தை வைத்துக்கொண்டு **நீரே என் இதய தெய்வம்** என்கிறேன். (சங் 57:7, சங் 108:1) எனது புய பலத்தில் சார்ந்து கொண்டு நீரே என் நம்பிக்கை என்கிறேன். (எரே 17:5,7) தெரிந்த **இறைச்சித்தத்திற்கும் கீழ்ப்படியாமல்** இருந்துகொண்டு **நீரே என் ஆண்டவர்** என்கிறேன், (லூக் 6:46) இதுமட்டுமா எவ்வளவு பொய்யான பாடலை பாடுகிறேன் ! **அனைத்தும்** கிறிஸ்துக்கே, எந்தன் **அனைத்தும் அர்ப்பணமே...** பொன் வெள்ளியுமோ, **பெரும் பேர் புகழோ** பண ஆசையும் **வீணல்லவோ?** என் கண்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, **என் வாயின் வார்த்தைகளும்** என் இருதயத்தின் தியானமும் உமது முன்னிலையில் **பிரியமாயிருக்கட்டும்** (சங் 19:14)

## எனது சகோதர அன்பு பலவீனமானது

**அடுத்தவனையும் உன்னைப்போல்** நேசி என்ற இறைக்கட்டளையை எத்தனை முறை வாசிக்கிறேன்., (லேவி 19:18, மத் 19:19, 22:39) தேவனிடம் முழு இதயத்துடன் அன்பு செலுத்த வேண்டும் என்ற முதலாம் கட்டளை போலவே இதுவும் சம முக்கியத்துவமுள்ளது என்று இயேசு சொல்லியும் அது எனது தலைக்குள் இன்னும் ஏறவில்லை. **சகவுறவுகளில் நான் பலக்குறைவாயிருப்பதற்கு இதுவே காரணம்.** என்னைக் கண்டித்துணர்த்தும் அப்போஸ்தலன் யோவானின் சவால் **இதோ கண்கண்ட சகோதரனிடம்** அன்பு செலுத்தாத **நீ கண்ணுக்குப் புலப்படாத** கடவுளிடம் **அன்பு செலுத்த முடியுமோ** ? (1 யோ. 4:20)

மனிதர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதனையே நீங்கள் அவர்களுக்குச்செய்யுங்கள். இதுவே திருச்சட்டமும் திருவாக்கினர்களும் கூறுவது என்று எனதாண்டவர் கூறியதும், அப்போஸ்தலர்களால் மறுபடி சொல்லப்பட்டதுமான ராஜரீகப் பிரமாணத்தை வசதியாய் ஓரங்கட்டிவிட்டேனே (மத் 7:12 :22:40: ரோ 13:8-10:கலா 5:14:யக் 2:8). மக்கள் **என்னைப் பாராட்ட** எதிர்ப்பார்க்கிறேனே: **நான் அவர்களைப் பராட்டுகிறேனா?** மக்கள் **என்னை அன்பாய் விசாரிக்க** விரும்பகிறேனே: **நான் அவர்களை விசாரிக்கிறேனா?** எதற்கென்றாலும் **மக்கள் எனக்கு நன்றிநவில** ஆசிக்கிறேனே: எனக்கான அவர்களது இரக்கச் செயல்களுக்கு **நான் நன்றி கூறுகிறேனா?** மக்கள் **என்னை மன்னித்துவிடத்** துடிக்கிறேனே: **நான் அவர்களை மன்னிக்கிறனா?** மக்கள் **எனக்காய் ஜெபிக்க நாடுகிறேனா:** நான் **அவர்களுக்காய் ஜெபிக்கிறேனா** ?இப்பட்டியல் நீண்டுகொண்டே போகும். மக்கள் எதையெல்லாம் எனக்குச செய்யக்கூடாது என்றொரு பட்டியலையும் தயாரித்துக் கொண்டிருக்கிறேன். அதை முடிக்கும் முன்னரே எனக்குக் கிடைக்கும் மதிப்பெண் கூட கிடைக்கவில்லை. தேர்வில் தோல்வி!

**என்னை நேசிக்கிறவர்களை மட்டுமே** நேசிக்கிறேன். என்னைப் பிரியப்படுத்துகிறவர்கள் மீது மட்டுமே விருப்பம். சத்துருக்களான நமக்காகவும் தமது உயிரையே கொடுத்துவிட்ட இயேசுவின் சீடன் என்று என்று என்னை நான் எப்படி அழைத்துக்கொள்ள முடியும்? (ரோ 5:10). எனக்கு ஆதாயமாயிருக்கும் வரை தான் பிறருடன் நட்பு வைத்திருப்பேன். சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான். இக்கட்டில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான் என்று திருமறை சொல்லவில்லையா? (நீதி17:17). எப்படியிருந்தாலும் Inspite of அன்பு என்றில்லாது. இப்படியிருப்பதால் because of என்றே இருக்கும் எனது அன்பு மட்டரகமானது. **கீழ்க்கண்ட நபர்களைப் போன்ற** நட்புணர்வும் சகோதர பாசமும் எனக்கு வேண்டுமென்று எவ்வளவாய் வாஞ்சிக்கிறேன். **ஆபிரகாம்** (ஆதி 14:14, 13:11), **யோசேப்பு** (ஆதி 45:5: 50:21), **மோசே** (யாத் 32:11-13. உபா 9:18,25-29), **யோனத்தான்** (1 சாமு 20:32), **பர்சிலா** (2 சாமு 19:32), **அகீக்காம்** (எரே 26:24), **எபெத் - மெலெகப்** (எரே 38:7-13), பவுல் (பிலே 24: கொலோ 4:10), லூக்கா (2 தீமோ 4:11), **எப்பாப்பிரோதீத்து** (பிலி 2:25). இம்மனிதர் முன்னால் நான் எவ்வளவு குள்ளனாயிருக்கிறேன்! நான் மற்றவர்களுக்கு சிநேகமாயிராவிடில் **யார் என்னிடம் ஒட்டுவார்கள்?** (நீதி 18:24). இரகசியங்களைப் பத்திரப்படுத்தாத ஓட்டைவாயன் நான் (நீதி 11:13). இப்படியிருந்தால் மக்கள் எப்படி என்னிடம் நெருங்கி வருவார்கள்?

சகோதர அன்பில் எனது பலவீனத்திற்கு இன்னொரு காரணம், **எதிலும் எவரிலும் குற்றங்காணும் எனது தீயகுணமாகும்**. எனது கண்ணிலிருக்கும் **மரக்கட்டையைக்** கவனியாது எனது சகோதரன் கண்ணிலிருக்கும் **மரத்தூளைப்** பார்க்கிறேனே! (மத் 7:5) மற்றவர்மீது கெடுபிடி **என் மீதோ** கனிவு (ரோ.2:1-4) சுயநீதியால் வஞ்சிக்கப்பட்டுள்ள எனக்கு எல்லாருமே கொடும்பாவிகளாகவே தெரிகின்றனர். (லூக் 18:9). என் இருதயத்தைக் சுத்தமாக்கினேன். என்னில் பாவமில்லாது துப்புரவானேன் என்று சொல்லக்கூடியவன் யார் ? என்று நீதிமொழிகள் 20:9 லுள்ள சவாலை மறந்துவிட்டேன். தேவ மனிதர் யாருமே அப்படிச் சொல்லாதிருக்க அப்படி மார்தட்டும் நான் முட்டாளுங்க! யோபு (யோபு 42:5,6) தாவீது (2 சாமு 12:13, சங் 51:1-7) **சங்கீதக்காரன்** (சங் 1129:176) **எஸ்றா** (எஸ்றா 9:6) **நெகேமியா** (நெகே 9:33,34) **ஏசாயா** (ஏசா 6:5,6) ,**தானியேல்** (தானி 9:8) **பேதுரு** (லூக் 5:8) **யோவான்** (1 யோ 1:8) யாக்கோபு (யாக் 3:2) மற்றும் பவுல் (ரோ 7:18, 1 தீமோ 1:15) ஆகிய இவர்களில் யாருமே என்னில் குற்றமில்லை, பாவமில்லை, என்று சொல்லவில்லையே ! தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். (லூக் 18:13) என்னிடம் தேவன் காட்டும், காட்டிய பொறுமையை மறந்து சில மக்களை பார்த்து **இவர்கள் தேறமாட்டார்கள்** என்று தீர்த்துவிடுகிறேன். பரலோகில் எனக்கு மூன்று அதிர்ச்சிகள் காத்திருக்கின்றன. (1) நான்வெகுவாய் எதிர்பார்த்தோர் அங்கிருக்கமாட்டார் (2) வரவே மாட்டார்கள் என்று நான் நினைத்தோர் அங்கு அமர்ந்திருப்பர், (3) நானும் அங்கிருப்பேன் (மத் 8:11,12) (லூக் 13:29,30) உன்னைவிட நான்- மேல் என்ற எனது மனப்பான்மைதான் ஒழித்துக்கட்டபட வேண்டியது.

தான தர்மத்திலும் நான் பலவீனனாயிருக்கிறேன். கிறிஸ்துவன் முன்னோடி 50 சதவீதத்தை எளியவருக்குக் கொடுக்கச்சொல்லிருக்க,கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவனாகிய நான் நலிந்தேரைத் தூக்கி 10 சதவீதம்கூட கொடுக்காதிருக்கிறேனே (லூக் 3:11) சகேயுவின் கதையை விளக்கும்போது. எளியோரின் நலனுக்காய் அவர் 50 சதவீதத்தைத் தன்னார்வமாய்க்கொடுக்கவந்ததை எவ்வளவு புத்திசாலித்தனமாய்க கடந்துசெல்கிறேன் (19:8) தங்ளது தரித்திரத்திலும் மக்கெதோனியக் கிறிஸ்தவர்கள அவ்வளவு களிப்பாய் கொடுத்தார்கள். நானோ எனது நிறைவிலிருந்து கொடுப்பதுக்குகூட **கணக்கு பார்க்கிறேனே** (2 கொரி 8:1-3) உணவற்றவனையும் உடையற்றவனையும் பார்த்து அவனது தேவையை சந்திக்காமல் தைரியமாயிரு. உனக்காய் **நான் ஜெபிக்கிறேன்** என்று சொல்லியனுப்பும் எனது வறட்டு மார்க்கம் ஒழிக! இது செத்த விசுவாசம் மட்டுமல்ல, செத்த நாறிப்போன விசுவாசம் (யாக் 2:16:17) பேச்சு பிரமாதம், ஆனால் செயல் (1 யோ 3:17,18), இன்னும் **இரண்டு மூன்று தலைமுறைகளுக்குச்** சேர்த்துவைத்துள்ள நான் **அன்றுள்ள அப்பம் கேட்டு** ஜெபிக்கிறேன்.

ஆனால் அடுத்த உணவு எங்கிருந்து வருமென்று தெரியாத எளியவனை கண்டு எரிச்சல் வருகிறது. என் மீது தேவ கோபம் இன்னும் ஊற்றப்படாதிருப்பது எனக்கு ஆச்சரியம்தான் ! யோபு 31:16-23)

பொருளாதார ரீதியில் நான் கீழ்மட்டத்தினன் என்று வைத்துக்கொள்வோம். செல்வச் செருக்கில் மிதந்துக்கொண்டிருக்கும் இவ்வுலகில் இது பாதகமானதொரு நிலைதான் என்பது மறுக்கமுடியாதது. உலகம் என்னை அசட்டையாகவே பார்க்கும். நானோ தமது அடிமையின் தாழ்மையை தேவன் நோக்கிப்பார்த்தார் என்ற மரியன்னையின் பாடலை அவர்களுடன் சேர்ந்து பாடுகிறேன். (லூக் 1:48) **தீர்க்கதரிசி** எவரும் செல்வந்தராயிருக்கவில்லை, **அப்போஸ்தலர்** எவரும் பணக்கார இருக்கவில்லை. என் தலைவர் **இயேசுவும்** பொருள்படைத்தவராயிருக்கவில்லை. தங்களது உணவின்மை ,உடைவின்மை, உறைவிடமின்மை போன்றவற்றை குறிப்பிட்டு **நாங்கள் பலவீனர்** என்று அப்போஸ்தலர்கள் வெட்கப்படாமல் அறிக்கையிட்டார்கள். (1 கொரி 4:10,11) **தேவன் உலகில் பலவீனமான வற்றைத்** தெரிந்துகொண்டார் (1:27) பரலோகத்தை இல்லாதவர்கள் நிரப்புவார், துதியுங்கள் ! நான் ஏன் இப்படி பாடுகிறேன் தெரியுமா ? செல்வந்தனது வாழ்க்கையில் ஆண்டவர் ஓர் அற்புதம் செய்யாவிட்டால் அவன் பரலோகில் நுழைவதைவிட ஊசியில் காதில் ஒட்டகம் நுழைவது எளிதாம் (மாற் 10:23-27) எனது அசவுகரியங்கள் அல்லது அசாதகங்களை நான் பொறுமையாய்ச் சகித்து நடக்க வேண்டும் என்பதை **பொருளாதாரக் குறை பாட்டைக் குறிப்பிட்டே பவுலடியார்** சொன்னது ஆகும். என்னை பலப்படுத்தும் கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பலமுண்டு, (பிலி 4:12,13) தேவனுக்குப் பிரியமான வகையில் நான் அவருக்கு ஊழியம் செய்யும்படி எனது அசாதகமான காரியங்களை அனுகூலமாக்க தேவனால் கூடும். எனது தம்பியும் **நானும்** வளர்ந்த எங்கள் சொந்த ஊராகிய நாசரேத்திலுள்ள எங்கள் வீட்டில் மச்சு ஒழுகிறது, ஜன்னல்களுக்குக் கதவு கிடையாது. வாரந்தோறும் மாட்டுச் சாணத்தால் தரை மெழுகப்படவேண்டும். மின்சாரம் கிடையாது , இப்படி பல. அன்றைய நாட்களில் எங்களுக்கு செருப்பு கிடையாது, பள்ளி உல்லாச பயணங்கள் கிடையாது. சென்னை IIT ல் ஈராண்டு முதுநிலைப் பட்டப்படிப்பின்போது **இரண்டே மேற்சட்டைகள், இரண்டே கால்சட்டைகளுடன் சமாளித்தேன், மடித்துவைத்த** துணிகளைத் **தேய்ப்பது** எனது **தலையணைதான்,** அசாதகங்களின் அனுகூலத்தை இன்று கொண்டாடுகிறேன். I celebrate the advantage of disadvantages

## 5. எனது உடல் பலவீனமானது

அழிவுக்குரிய எனது இவ்வுடலில் எத்தனையோ உடல் நலக்கேடுகளயும் பலக்குறைவுகளும் உண்டு. என் தேவனோ சுகமளிப்பவர் **யேகோவா –ரப்பா** என்பது அவரது பெயர் ( யாத் 15:26இ) அவர் அற்புதங்களின் தேவன் (வச 11) **அவரால் முடியாதது எதுவுமில்லை.** அவரது வல்லமையால் அற்புத சுகம் பெற்றோரின் சரிதைகளால் அவரது வார்த்தையாகிய திருமறையில் நிறைந்திருக்கிறது. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி 13:8) எனது பாவங்களை மட்டுமல்ல, ரோகங்களையும் அவர் சுமந்து தீர்த்தார் (ஏசா 63:4,5 மத் 8:16,17) அவரது இரத்தம் என்னைச் சுத்தமாக்குகிறது. அவரது இரணங்கள் என்னைச் சுகமாக்குகின்றன. அவர் எனது அக்கிரமங்களையெல்லாம் மன்னிக்கிறார். எனது நோய்களையெல்லாம் குணமாக்குகிறார் (சங். 103:3) .தூயாதி தூயவரே உமது புகழை நான் பாடுவேன் !

உடல் சுகத்திற்கான இத்தனை **திருவாக்குகள் பைபிளில் நிறைய இருந்தும்,** ஏனோ தெரியவில்லை , **எனக்கு உடல்நலக்குறைவுகள்** இருக்கத்தான் செய்கின்றன. முள்ளைப்போல் அவை என்னைக் குத்திக்கொண்டிருக்குக்கின்றன. இதற்காய் நான் தேவனிடம் ஜெபிக்கையில் அவர் ஒரு சில முட்களைத்தான் எடுத்துவிடுகிறார். எல்லா முட்களும் எடுக்கப்படுவதில்லை. **என் கிருபை உனக்குப் போதும்** உன் பலக்குறைவில் என் பலம் நிறைவாய் விளங்கும் என்று சொல்லிவிடுகிறார். (2 கொரி 12:8,9). என் மீது அமர்ந்திருக்கும் அவரது வல்லமையின் மூலம் எனது நோய்களைச் சமாளிக்க அவர் அருள்செய்கிறார் (வச 9இ) . அந்தந்த நாளின் கடமைகளைச் செய்துமுடிக்கக் காலைதோறும் அவர் எனக்குப் புதிய கிருபை தருகிறார். (புல 3:22, 23) **உடல் ஆரோக்கியத்திற்காக** எனக்குக் கிடைக்கும் **மருத்துவ உதவிகளுக்காய்** அவரை துதிக்கிறேன்.(மத் 9:12). ஆனாலும் **நான் என் வாயைக் கட்டுவது போதாது, பிரியாணியை பார்த்ததும் பறக்கிறேனே!** (நீதி 23:1-3) தொப்பையைக் குப்பைத்தொட்டியாக்கிவிட்டேனே !

உடல்நலக் குறைவுகள் தங்களை முடக்கிட இடங்கொடாத பரிசுத்தவான்களின் சரிதைகளைத் திருச்சபைச்சரித்திரத்திலும் வாசித்து ஊக்கமடைகிறேன். **பிறந்து சில வாரங்களில் பார்வையை முழுவதும் இழந்தும்**, கிறிஸ்தவ உலகிற்கு 8000க்கும் கூடுதலான **பாமாலைப்பாடல்கள்** தந்துள்ள **பேன்னிகிராஸ்பி** (1823-1915) அம்மையாரை நினைத்துப் பார்க்கிறேன், Blessed assurance,Jesus is mine **இயேசுவை நம்பி பற்றிக்கொண்டேன்** என்ற பாடலை இயற்றியவர் அவர்தன் ! பலக்குறைவான உடலுள்ள பவுலடியார் சத்தான கருத்துக்களை முத்தான வார்த்தைகளால் தனது கடிதங்களில் கொட்டியதை

எண்ணிப்பார்க்கிறேன் (2 கொரி 10:10) **உடல் பலக் குறைவு** என்றாலும் **எவ்வளவு கடினமான மிஷனரிப்பயணங்களை** மேற்கொண்டு விறுவிறுப்பாக **சபைகளை அவர் நிறுவினார்.** (1கொரி 2:3,4) **காலரா** போன்ற தொற்றுநோய் பரவியுள்ள **மெலித்தா** என்ற தீவில் அவரது கப்பல் கரையொதிங்கியது, தேவன் அவரைப் பத்திரமாய் காப்பாற்றி , அந்த **தீவினருக்கு** அவர் **சுகமளிப்பு ஊழியமும்** செய்ய அருளினார் (அப் 28:1,7-9) இன்று ஒன்று விட்டு ஒன்று என்று தேவ ஊழியருக்கு எத்தனைச் சுகவீனங்கள் ! ஆனாலும் பரம வீட்டிற்கு செல்லும்வரை தேவ சித்தத்தின்படி இத்தலைமுறையினரை ஆசீர்வதிக்கும்படி அவர்கள் முன்சென்றுகொண்டேயிருக்கின்றனர். (அப் 13:36) பலவீனத்திலும் பலம்பெறுகிறார்கள், (எபி. 11:34) உடல் பலவீனங்களைச் சமாளிக்க அன்னாரது குடும்பத்தினரும் ஆண்டவர் சாராளுக்குச் கொடுத்ததுபோன்ற பலம் தருகிறார், அவர்களும் சாராளுக்குக் கொடுத்ததுபோன்ற பலம்தருகிறார், அவர்களும் திருப்பணியில் தீவிரம் காட்டுகின்றனர். (வச 11) **பலவீனப் பாத்திரங்கள்** என்று கருதப்படும் பெண்மணிகளுக்கு அவர் **கூடுதல் பலம்** அருளுகிறார். (1 பேது 3:7, 1 கொரி 12:22)

எனக்கு இப்பொழுது (2020) வயது 74 எனக்கு **இதய நோய், முதுகு வலி,குரல்வளை சேதம்** இப்படி எத்தனையோ உண்டு! ஆனாலும் தினமும் 8 மணிநேரம் அவருக்காய்ப் பணியாற்ற கர்த்தர் அனுதினக் கிரபையருளுகிறார். **நான்கு மணிக்கு** எழுந்து, **ஒன்பது மணிக்குப்** படுக்கச் செல்லுகிறேன்.நிறுவனத்திலருந்து தான் **ஓய்வு, ஊழியத்திலிருந்து அல்ல.** தேவனுக்கும் அவரது வார்த்தைக்கும் சாட்சியாயிருக்க அவர் என்னைப் பலப்படுத்திக் கொண்டேயிருக்கிறார். (அப் 1:8) எளிதில் உடையக்கூடிய இந்த மண்பானைக்குள் தேவன் வைத்துள்ள பரலோகப் பொக்கிஷத்தை உயிருள்ளவரை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்துக்கொண்டயிருப்பேன் (2 கொரி 4:7) **எனக்கு கொஞ்சப் பலம் மட்டுமே இருந்தாலும்** அவர் **திறக்கும் வாசல்கள் வழியே** அவரை உத்தமமாய் சேவித்துக் கொண்டிருக்கிறேன் (வெளி 3:8) எனது கையில் அவர் தந்துள்ள **பேனாவுக்காய்** அவரைத் துதிக்கிறேன். கரோனா கிருமியை குறித்த பயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் **மரண பயம்** கொஞ்சமும் கிடையாது. ஏனெனில் என் இயேசு என்னை அதிலிருந்து விடுவித்துவிட்டார். கர்த்தருடைய வீட்டில் நான் போய்சேரும்வரை **அவர் என் மேய்ப்பராய்** என்னை நடத்திச்செல்வார் (எபி 2:14, 15, சங். 23:4,6) இதோ **எனது தினசரி ஜெபம்** என்ன தெரியுமா? **தேவனே என் சிறுவயது முதல்** எனக்குப் போதித்துவந்தீர். இதுவரை உமது அதிசயங்களை **அறிவித்துவந்தேன்.** இப்பொழுதும் **தேவனே, இத்தலைமுறைக்கு** உமது **வல்லமையும்** வரவிருக்கும் யாவருக்கும் **உமது ஆற்றலையும்** நான் அறிவிக்கும்வரையிலும் **முதிர்வயதும்**

**நரைமுடியுள்ளவனாகும்வரை** என்னைப் கைவிடாதிரும்.... **முதிர்வயதில் என்னைத் தள்ளிவிடாமலும்** என்பலம் ஒடுங்கும்போது **என்னைக் கைவிடாமலும்** இரும். (சங் 71:17, 18,19)

எனக்கு ஊக்க மருந்தாயிருக்கும் திருவார்த்தை இதோ 2 கொரி 13:4 இயேசுவானவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும் தேவனுடைய வல்லமையால் பிழைத்திருக்கிறார். அப்படியே நாமும் அவருக்குள் பலவீனராய் இருந்தும், தேவனுடைய வல்லமையால் பிழைத்திருப்போம். **காலத்திற்குமுன் நான் இறந்துவிடாதபடி சாவுக்கேதுவான** எனது உடலை நொடிதோறும் உயிர்பித்துக்கொண்டிருக்கும் பரிசுத்த ஆவியானவருக்குக் காய்த் தேவனைத் துதிக்கிறேன். (ரோ . 8:11) இனி மரணம் இல்லை, துக்கம் இல்லை, அலறுதல் இல்லை, வேதனை இல்லை **என்றிருக்கப்போகும் நாளை எதிர்நோக்கி வாழ்கிறேன்.** (வெளி 21:4)

## முடிவுரை

போதுமான பலமன்றி நான் பலவீனமாயிருக்கம் பகுதிகள் எனது வாழ்வில் இன்னும் எத்தனையோ உண்டு, இக்குறைகள் யாவற்றிற்கும் இயேசு போதுமே! சோர்வுற்றவருக்கு வலிமையையும் வலிமையிழந்தவருக்கு ஊக்கமும் பெருகச் செய்யும் அவரிடம் அவ்வப்போது ஓடிவிடுகிறேன் (ஏசா 40:29). பாதை கரடுமுரடாகிக் கடினமாகும்போது எனது சொந்த பலம் என்று எதுவும் இருந்தாலும் அதுவும் பயனற்று போகிறது.(வச 30) **தேவனுக்குமுன் அமர்ந்திருக்கும்போதே** எனது பலம் புதுப்பிக்கப்படுகிறது. கழுகுபோல பறக்கவும் குதிரைபோல் ஓடவும் தொடங்கிவிடுகிறேன். (வச 31) நான் பலமே இல்லாத ஒரு பூச்சி என்றாலும், தேவன் என்னை பூமி பிளக்கும் இயந்திரமாய் மாற்றுகிறார் (41:14,15) **தாங்கமுடியாத ஏராளம் பிரச்சனைகள் என்னை அதிர வைக்கின்றன.** ஒரு முறை பவுலடியார் சொன்னதுதான் என் நினைவுக்கு வருகிறது. **பிழைப்போம் எனும் நம்பிக்கை ஒழிந்து போகுமளவு எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிகப்பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மீது நம்பிக்கையாயிராமல் இறந்தோரை எழுப்பும் தேவன்மீதே நம்பிக்கையாயிருக்கும்படி இப்படியாயிற்று** (2 கொரி 1:8,9) **கவலையைப்போல்** எனது பலத்தை உறிஞ்சுவது எதுவுமில்லை. ஆனாலும் **கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே எனது பலம்** (நெகே 8:10இ) இதோ எனது காதுகளில் விழும் கர்த்தரின் சத்தம் **பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக** Let the weak says, I am strong.(யோவேல் 3:10ஆ)

# கிருபையாடு கூடிய அற்புதம்

என்னை **ஜெபத்திலும், காணிக்கையாலும்** தாங்கிவரும் வாசகர்களுக்காகவே Dr. புஷ்பராஜ் (ஜாமக்காரன்) g þB ¨ [ Ð ç ¦ B Bank Balance வங்கியில் உள்ள கையிருப்பை ஜாமக்காரன் பத்திரிகையில் ஒவ்வொரு வருடமும் வெளியிடுவது வழமையானதொன்றாகும்.

எனக்கு **இரண்டு** வங்கியில் மட்டும் **வரவு – செலவு** உண்டு.

1) (SBI) State Bank of India, Srirangapalayam Branch, **Salem**
2) CANARA BANK, Suramangalam Branch, **Salem**

இரண்டு வங்கியிலும் 2022 **மார்ச்** மாதம் வரை உள்ள கையிருப்பின் மொத்த தொகை விவரம் சமர்பிக்கிறேன்.

SBI State Bank of India, Srirangapalayam Branch, SALEM

PPO Number :

Generally used abbreviations

| | | |
|---|---|---|
| a/c = Account | dep = Deposit | Pr = Principal |
| adj - Adjustment | Dft = Draft | proc = Processing cha |
| Amt = Amount | dish/dsh = Dishonour | rd = Recurring Deposi |
| Ar = Arrear | DR = Debit | ret/rtn = Return |
| bal = Balance | DoB = Date of Birth | Rnd = Round of |
| Capn = Capitalization | eft = Electronic Fund Transfer | sb = Savings Bank |
| chg/ch = charge | Inop = Inoperative | SC = Short Credit |
| chq = Cheque | ins = Insurance | SI/So/SORD = Standin |
| Clos = Closure | int/in = Interest | S/D/W/H/o = Son/Dau |
| coll = Collection | lon/ln = Loan | tr/trf/xfer = Transfer |
| comm = Commission | min = Minimum | TT = Telegraphic Transfer |
| COR / CORR = Correction | os = Outstanding | txn = Transaction |
| CR = Credit | P & T = Postage & Telegram | Wdl = withdrawal |
| csh = Cash | Pos = Point of sale | +Mod bal = total balance (Sb+linked MOD a/c) |



भारतीय स्टेट बैंक State Bank of India

Branch: SRIRANGAPALAYAM (SALEM) Code: 1970
11/289,RAMKRISHNA ROAD, SALEM.

Email:SBI.01970@SBI.CO.IN
Phone No.: 2312794 Buss. Hrs:09:45:00-16:45:00
IFSC: SBIN0001970 MICR: 636002003

Name: DR PUSHPARJ M G E
S/D/H/o : MANGALAVADHANI MOP: SINGLE
CIF Number : 80611525258 A/c Opening Dt: 25/04/1998
Account No.: 10764116842 Nom Reg No: 0000000219132225
A/c Type : REGULAR SAVINGS BANK ACCOUNT Customer's PAN: ADEPM5593P
Address : 89 & 90, MAJEETH STREET, Date of Issue: 05/03/2022
OLD SURAMANGALAM CONTINUATION
SALEM -5, SALEM-TALUK
Phone No. : 04272387499
Email :
D.O.B.(If Minor):

शाखा प्रबंधक
Branch Manager

AT 02242 NEYVELI BAZAAR

| | | | |
|---|---|---|---|
| 31.03.23 | UPI/CR/309046617228/STEVE MI/INDB/988411<br>693434162097<br>AT 00001 KOLKATA BRANCH | 1000.00 | 31982.57 CR |
| 31.03.23 | UPI/CR/309051445419/JOHN RAJ/RATN/984083<br>695206162092<br>AT 01970 SRIRANGAPALAYAM (SALEM) | 5791.00 | 37773.57 CR |
| 31.03.23 | NEFT IOBAN23090669991 | 500.00 | 38273.57 CR |

31-03-23.......................................................................Balance Rs. 38273 57

Nominee Name: Nominee RegNo:

केनरा बैंक Canara Bank



NAME AND ADDRESS OF BRANCH:
SALEM SURAMANGALAM
CANARA BANK
58, POST OFFICE,MAIN ROAD
SURAMANGALAM
SALEM
TAMIL NADU-636005
IFSC Code:CNRB0001219 MICR Code: 636015005
Tel No:9489043430 Fax No:1
Email ID:cb1219@canarabank.com

Contact details of Banking Ombudsm
The Banking Ombudsman
C/o. RBI
Fort Glacis
Chennai
Chennai-600001
Tel.No.0000/0000
Fax.No.0 Email ID:bochennai@rbi.org.in

ACCOUNT DETAILS: Account No:1219101013622
NAME(S) PUSHPARAJ M.G.E

Occupation X - not categorized
Address 89 90 MAJID STREET,OLD SURAMANGALAM ,SALEM-636005-TAMIL NADU-INDIA PIN/ZIP number: 636005

Customer ID : 27605332 D.O.B : 13-NOV-1941
A C Opened On 16-MAY-1987
Mode of Operation:SELF PB Issue Date:20-SEP-2021
Mobile:919894261333 Email:

खाता सं A/c No.

| क्रम सं. Sl. No. | तारीख Date | विवरण Particulars | चेक संख्या Ch No. | निकासी Withdrawals | जमाराशियाँ Deposits | शेष Balance | आद्याक्षर Initials |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 1219101013622 | | | | | |
| 02 | | | | | | | |
| 03 | | Balance B/F | | | | 29949.49 | |
| 04 | 26/03/2023 | SMS CHARGES ON ACTUAL | | 7.00 | | 29942.49 | |
| 05 | | BASIS | | | | | |
| 06 | 29/03/2023 | MB/1123101042002/RATH | 99900000 | | 2000.00 | 31942.49 | |
| 07 | | NA SINGH CHRISTO/1219 | | | | | |
| 08 | | 101013622/DR PUSHPARA | | | | | |
| 09 | | J/CANARA/offering/843 | | | | | |

25-03-2022............................................................................................ ...................Balance 31942 49

இரண்டு வங்கிகளின் கையிருப்பு தொகை மிக குறைவாக காணப்படுகிறதே இனி வரும் நாட்களில் ஜாமக்காரன் பத்திரிக்கை மாதம் தோறும் **தமிழ் & மலையாளம்** இரண்டு பாஷைகளிலும் அச்சிட ஆகும் **அச்சக செலவு – பேப்பர் செலவு** அவைகளை அனுப்ப **தபாலில் சேர்க்க ஸ்டாம்ப் செலவுகள்** பத்திரிகையை **கவரில்** இடுவதற்கு **கவர் தயாரிக்கும்** செலவு, அலுவலகத்தில் உள்ள **கம்யூட்டர் அலுவலர் சம்பளம்.** இன்னும் இதர போக்கு வரவு செலவுகளுக்கு **பல லட்சம் ரூபாய்களை** எப்படி பெற்று சமாளிக்க போகிறீர்கள் என்று பலருக்கு கேள்வி எழலாம். இந்த விஷயத்தை குறித்துள்ள விவரத்தை ஒவ்வொரு வருடமும் வெளியிடுகிறேன். இது இவ்வூழியத்தை **என்னிடம் ஒப்புவித்த** என் ஆண்டவர் இதுவரை எனக்கு தொடர்ந்து எனக்கு வழமையாக செய்யும் **கிருபையுள்ள அற்புதம்** ஆகும்.

அந்த கிருபை அப்படியே பணத்தில் குறையேதும் இல்லாது தொடரும். என்னை கர்த்தர் உயிரோடு வைத்து ஊழியம் செய்ய அனுமதிக்கும்வரை ஜாமக்காரன் பத்திரிகை தொடர்ந்து வெளியிடப்படும். என் பிரசங்க ஊழியமும் தொடரும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். இதுவரையில் ஊழியங்களுக்கு பணம் உதவி செய்த யாவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

ஆமென்

# நான் உனக்கு சொன்னதை செய்யுமளவும் உன்னை கை விடுவதில்லை .

ஆதி. 28:15

APRIL - 2023

Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

**Annual Subscription:**
**India** - Rs.60/
**Foreign** - Rs.600/

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.